# ஜூன் மாத ராசி பலன்

ஜோதிடர் மோகனபிரியா

Join us on our
WhatsApp/Youtube/Insta/X/Fb



## ரிஷபம்

ரிஷப ராசியினருக்கு மாத தொடக்கத்திலே ராசியிலே ராசி அதிபதி சுக்கிரன் ஆட்சி ஆகிறார். மாளவிய யோகத்தில் சுக்கிரன் இருப்பது மிக நல்ல அமைப்பாகும். ராசிநாதன் ராசியில் ஆட்சி பெற்று ஸ்தான பலத்தோடு இருப்பதால் தைரியமும் தன்னம்பிக்கையும் கூடும். அஷ்டமாதிபதி குரு ராசியில் இருந்தாலும் அவர் லாபாதிபதியாகவும் இருப்பதாலும், சுகாதிபதியாகிய சூரியன் சுக்கிரனையும் குருவையும் அஸ்தங்கம் செய்து ராசியிலேயே அமர்வதாலும், கடந்த மாதத்தில் இருந்த அலைச்சல்கள் டென்ஷன்கள் குறைந்து சற்று ஓய்வுடன் கூடிய  நிதானத்துடன் செயல்பட முடியும்.



Join us on our
**WhatsApp/Youtube/Insta/X/Fb**

# ரிஷபம் - ஜூன் மாத ராசி பலன் தொடர்கிறது...

தன மற்றும் பஞ்சமாதிபதியாகிய புதன் ராசியில் அமர்வது பொருளாதார சிக்கல்களை தீர்க்கவும், வாக்கு கொடுத்த நேரத்தில் வாங்கிய கடனை திருப்பி கொடுக்க வைத்து கௌரவத்தை காப்பாற்றவும் உதவும். மேலும் வாக்கு நாணயம் உண்டு சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். வெளிநாட்டில் வேலை செய்பவர்களுக்கு தாய் நாடு சென்று வரும் யோகம் உண்டு.

மாணவர்கள் சிலருக்கு விரும்பிய கல்லூரிகளில் மேற்படிப்பு படிப்பதற்காக அண்டை மாநிலங்களுக்கு சென்று ஹாஸ்டெலில் தங்க நேரிடும்.

சொந்த தொழில் செய்பவர்களுக்கு பத்தில் சனி ஆட்சி பெற்று இருப்பதால் கொஞ்சம் தடை தாமதத்திற்கு பிறகு லாபத்தை ஈட்டி கொடுப்பார்.

# ரிஷபம் - ஜூன் மாத ராசி பலன் தொடர்கிறது...

Join us on our
WhatsApp/Youtube/Insta/X/Fb

பனிரெண்டில் செவ்வாய் ஆட்சி பெற்று இருப்பதாலும் சனியின் மூன்றாம் பார்வையை பெறுவதாலும் நிம்மதியான உறக்கம் கெடும். தொழிலை பற்றிய சிந்தனைகள் வந்து போகும். பிரயாணத்தினால் அலைச்சல்கள் வந்து போகும்.

நிலம் வீடு வாகனம் போன்ற அசையும் அசையா சொத்துக்களை விற்க நினைத்தவர்கள் இப்பொழுது விற்க முடியும், அல்லது புதிதாக வாங்க நினைத்தவர்கள் இப்பொழுது வாங்க முடியும்.

இல்லற மற்றும் தாம்பத்ய வாழ்க்கையில் வாழ்க்கை துணையோடு விட்டு கொடுத்து போக வேண்டிய நேரம்.

வாடகை வீட்டில் இருப்போர்க்கு ஓரிடத்தில் இருந்து வேறொரு இடத்திற்கு குடி பெயர்வதற்கு சிந்தனைகள் எழும். அவ்வாறு குடிபெயர்வதற்கும் ஏற்ற காலம்.

# ரிஷபம் - ஜூன் மாத ராசி பலன் தொடர்கிறது...

Join us on our
WhatsApp/Youtube/Insta/X/Fb

கணுக்காலுக்கு கீழ், பாதம் போன்ற இடங்களில் சிறு சிறு காயங்கள் தோன்றி மறையும். உங்கள் சுய ஜாதகத்தில் மோசமான தசா புத்தி நடக்கும் பட்சத்தில் காலில் அடிபட வாய்ப்பு உண்டு. முன்னெச்சரிக்கையோடு இருக்கவும். சுகாதிபதி ஆட்சி பெற்று இருப்பதால் பயம் கொள்ள தேவையில்லை.

**மொத்தத்தில் ரிஷப ராசியினருக்கு பொருளாதார சிக்கல்கள் தீர்ந்து அசையும் அசையா சொத்துக்கள் வாங்க உகந்த காலம். பயன்படுத்தி கொள்ளுங்கள்.**

**அதிர்ஷ்ட நாட்கள்: 1,2,6,8,10,11,13,20,27,28,29,30**

